[1972 ஆகஸ்ட் 11

ஒலி, ஒளிக்காட்சிகள்

*80 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை பெரிய கோவிலில் மாமன்னன் ராஜ ராஜ சோழன் வாழ்க்கை வரலாற்றை ஒலி, ஒளிக்காட்சியாக நடத்த இவ்வரசு மத்திய அரசுக்கு கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. அ. தேவேந்திரன் : இனிமேலாவது அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்தக் கேள்வி ஒலி, ஒளிக் காட்சியைப் பற்றி அமைந்திருக்கிறது. தஞ்சை பெரிய கோவிலில் மாமன்னன் ராஜ ராஜ சோழன் வாழ்க்கை வரலாற்றை ஒலி, ஒளிக் காட்சியாக நடத்த இவ்வரசு மத்திய அரசுக்கு கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா என்பது கேள்வி. 6 கால பூஜை நடக்கின்ற கோவில்களில் ஒலி, ஒளிக் காட்சி ஏற்படுத்துவதில் சில சங்கடங்கள் இருப்பதை ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆகவே, அந்த வகையில் தஞ்சை பெரிய கோவிலில் ராஜ ராஜ சோழன் வாழ்க்கை வரலாற்றை ஒலி, ஒளிக் காட்சியாக நடத்த ஏற்பாடு செய்வது தற்பொழுது கஷ்டமான சூழ்நிலையில் உள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : பொதுவாக திருக்கோவில்களில் ஒலி, ஒளிக் காட்சிகள் நடத்துவது அவ்வளவு சரியல்ல என்று சொல்லப்படுவதால் தனியாக அதற்காக கூடங்கள் அமைத்து அந்தக் கூடங்களில் ஒலி, ஒளிக் காட்சிகளை ஏற்பாடு செய்வதற்கு டூரிஸம் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஒலி, ஒளிக் காட்சி 6 கால பூஜை நடக்கின்ற கோவில்களில் ஏற்பாடு செய்வதிலே கஷ்டங்கள் இருக்கின்றன. அதைத் தான் அம்மையார் திரும்பவும் வற்புறுத்துகிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டின் சரித்திரமும், கோவில்களின் சரித்திரமும் பின்னி இணைந்து இருக்கிற காரணத்தினால் ஒலி, ஒளிக் காட்சிகளை கோவில்களில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று பல பேர்கள் விரும்புகிறார்களே தவிர, அது ஆஸ்திகர்களுக்கு கஷ்டமில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 11]

திரு. ஏ. சுப்பிரமணியம்: பழைய கால கட்டடத்துக்குள்ளே ஒலி, ஒளிக் காட்சி அமைப்பதன் மூலம் அந்தக் கட்டடத்திற்கு சேதம் ஏற்படக்கூடும் என்று சில மாதங்களுக்கு முன்னால் மேல் நாட்டு நிபுணர்கள் அறிக்கை விடுத்திருந்ததை அமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் பார்த்தார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கோவில்களை புதுப்பிப்பதனால் கட்டடங்கள் கெட்டுவிடுகின்றன என்ற எண்ணம் தான் வெளியிடப்பட்டிருக்கிறதே தவிர ஒலி, ஒளிக் காட்சி ஏற்பாடு செய்வதன் மூலம் கட்டடங்கள் கெட்டுவிடுகின்றன என்று எந்த விதமான அறிக்கையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

*** 81 *Q*.—Thiru K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—**

(*a*) whether it is a fact that the Union Government have **agreed to instal the "ஒலி, ஒளி" exhibition in Madurai Meenakshi** Temple; and

(*b*) if so, the steps taken to start the exhibition?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) ஆம், மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ரூ. 18 லட்சம் செலவில் ஒரு ஒலி, ஒளிக் காட்சிக்கு அனுமதி தந்திருப்பதாக 1970-ம் ஆண்டு அக்டோபர்-நவம்பரில் மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. இருந்தாலும், தனிப்பட்டவர்களிடத்திலிருந்தும், சங்கங்களிடமிருந்தும் ஒரு வழிபாட்டு இடத்தை அதற்கு உபயோகப்படுத்தக் கூடாது என்ற முறையீடு வந்ததன் பேரில், மதுரையில் வைக்கப்பட இருந்த அந்த ஒலி, ஒளிக் காட்சியை மாமல்லபுரத்திற்கு மாற்றுவதாக 1971-ம் ஆண்டு மே திங்களில் மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் 6 கால பூஜைக்குப் பாதகம் இல்லாத முறையில் ஒலி, ஒளிக் காட்சி நடத்த முடியும் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அம்மாதிரி கூடாது என்று எந்த ஸ்தாபனங்கள் அரசுக்கு தெரிவித்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சேலத்தில் நடைபெற்ற ஆஸ்திக இந்து மத மகாநாட்டின் சார்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினார்கள். மத்திய அரசு ஒலி, ஒளிக் காட்சியை அப்படிப்பட்ட கோவில்களில் வைக்கக்கூடாது என்று மாற்றி, பல்லவ சரித்திர